[11th March 1958

SRI A. A. RASHEED : Sir, is there any separate N.C.C. for girls, and if so, may I know the number of units?

THE HON. SRI C. SUBRAMANIAM : The hon. Member will kindly look into the statement placed on the table of the House.

SRI A. VEDARATHNAM : இந்த உடைகள் கதரா ? அல்லது வேறு துணியா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : மில் துணி.

SRI S. B. ADITYAN : மாணவர் படையினருக்கு இந்தி மொழியில் பயிற்சி அளிப்பதை மாற்றி தமிழிலேயே பயிற்சி அளிப்பதற்கு வசதி செய்யப் படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது மொழி பிரச்னை அல்ல. தேசியப் படை எந்த ரீதியில் பயிற்சி அளிக்கப்படவேண்டுமோ அந்த ரீதியில், அடிப்படையில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

SRI K. VINAYAKAM : Sir, whereas free uniforms are distributed to the children joining N.C.C., will the Government kindly consider the feasibility of having them supplied even at the initial stages by the authorities concerned, instead of collecting money from the children and then returning it at the end of the year? This is the practice now obtaining in the schools. Even at the stage of manufacture of dress, the children have got to pay in advance and then they get it back at the fag end of the year. Is it possible to change that policy and supply the dress even at the earlier stage gratis as is being supplied to the conductors in transport or the police personnel and others?

THE HON. SRI C. SUBRAMANIAM : I would like to verify the information given by the hon. Member. If necessary, I shall take action.

SRI A. GOVINDASAMY : அந்த உடைகள் துணியாகக் கொடுக்கப் படுகிறதா ? தைத்துக் கொடுக்கப்படுகிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : தைத்துக் கொடுக்கப்படுகிறது.

SRI A. VEDARATHNAM : இந்த ஆடைகளைக் கதர் துணியில் வழங்க சர்க்கார் ஆலோசிக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போது அது ஆலோசனையில் இல்லை.

SRI P. G. MANICKAM : ஆசிரியர் பயிற்சிப் பள்ளியிலும் இந்த தேசீய மாணவர் படையை புகுத்துவதற்கு சர்க்கார் ஆலோசனை செய்யுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போது அது ஆலோசனையில் இல்லை.

Coleroon and Mukkani bridges

* 279 *Q.*—SRI A. GOVINDASAMY (on behalf of Sri M. P. Subramaniam) : Will the Hon. the Minister for Public Works be pleased to state the expenditure incurred by the Government for the functions connected with the opening of—

(i) the Coleroon Bridge on 11th June 1957; and

(ii) the Mukkani Bridge across Tambaraparani on 7th June 1957 by the Chief Minister?

THE HON. SRI P. KAKKAN : (i) Rs. **2,514**.

(ii) Rs. **1,160**.

11th March 1958]

SRI A. GOVINDASAMY : கொள்ளடம் பாலத்தைத் திறக்கிறபோது கண்டிராக்டர்கள் ஏதாவது செலவு செய்திருக்கிறார்களா ?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் தனியாகக் கேள்வி போடவேண்டும்.

SRI K. VINAYAKAM : Sir, the bridge is known after the village in which the bridge is constructed, namely, Kolladam. Will the Government be pleased to change the name from Coleroon bridge to Kolladam bridge?

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

SRI K. ANBAZHAGAN : கொள்ளடம் பாலம் திறப்பு விழாவின் போது ஏறத்தாழ ஐயாயிரம் பேருக்கு விருந்து வைக்கப்பட்டது என்று தெரிகிறது. அந்தச் செலவை அரசாங்கம் ஏற்றுக்கொண்டதா? அல்லது கண்டிராக்டர் ஏற்றுக்கொண்டாரா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் தனியாகக் கேள்வி போடவேண்டும். . .

SRI A. GOVINDASAMY : சாதாரணமாக இந்தப் பாலத்தின் திறப்பு விழாவின்போது இரண்டாயிரம் ரூபாய் அரசாங்கம் செலவு செய்ய வேண்டிய காரணம் என்ன என்று கேட்கிறேன்.

THE HON. SRI P. KAKKAN : இந்தப் பாலத்தின் அவசியத்தை கனம் அங்கத்தினர் உணர்ந்து கொண்டால் இதன் அவசியத்தை உணர்ந்து கொள்வார்கள். இந்தப் பாலம் இல்லாத காரணத்தினாலே தஞ்சை ஜில்லா நெல் நேரிடையாக தென்னாற்காடு பக்கம் வரமுடியாமலும், இங்கிருந்து கரும்பு அங்கே செல்ல முடியாமலும் இருந்திருக்கிறது.

THE HON. SRI C. SUBRAMANIAM : திறப்பு விழாவைப்பது அமைச்சர் அவர்களைப் பெருமைப்படுத்துவது என்பதற்காக அல்ல. இந்த மாதிரியாக பெரிய அபிவிருத்தித் திட்டம் நிறைவேற்றப்படும்போது திறப்பு விழா வைப்பதன் மூலம் பல அபிவிருத்தித் திட்டங்களில் உற்சாகத்தை மக்களிடையே ஏற்படுத்தி இந்த மாதிரியான திட்டங்களில் மக்கள் மேலும் மேலும் ஈடுபடுவதற்கு ஒரு வாய்ப்பு உண்டாக்க வேண்டும் என்பதுதான் குறிக்கோள். அதைத் தவிர இந்தத் திறப்பு விழாக்களினால் மந்திரிகளுக்கு லாபம் இல்லை. உத்தியோகஸ்தர்களுக்கு லாபம் கிடையாது. அதற்குப் பதிலாக ஒருவாரம் அந்த உத்தியோகஸ்தர்கள் மிகவும் கஷ்டப்பட்டு விழாவுக்கு ஏற்பாடு செய்ய வேண்டியிருந்ததுதான் பயன்.

SRI K. ANBAZHAGAN : கொள்ளடம் பாலம், கட்டப்படுவது சம்பந்தமாக ப்ரெஞ்சு நிபுணர் ஒருவரிடம் ஆலோசனை கேட்கப்பட்டு நடத்தப்பட வேண்டியிருக்க அந்த ஆலோசனை இடைக்காலத்தில் நிறுத்தப்பட்டு விட்டதையும் ஏற்பட்ட காலதாமதத்தையும் மறைப்பதற்காக பெருவிழா நடத்தப்பட்டது என்பது உண்மையா?

THE HON. SRI P. KAKKAN : ப்ரெஞ்ச் நிபுணரின் ஆலோசனையைக் கேட்டுத்தான் நடந்திருக்கின்றன.

THE HON. SRI C. SUBRAMANIAM : அங்கத்தினர் அவர்கள் இதில், விஷயம் தெரியாமல் இந்தக் கேள்வியைப் போட்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியில் இந்த விஷயம் பூராவும் சர்ச்சை செய்யப்பட்டு சரியான முறையில் இந்தப் பாலம் கட்டப்பட்டு இருக்கிறது என்று அந்தக் கமிட்டியினரே உணர்ந்திருக்கிறார்கள். ஆகவே, இம்மாதிரி கேள்வி போடுவதற்குமுன் விஷயத்தை தெரிந்து கொண்டு கேள்வி போட்டால், அதுவும் தலைவர்களாக இருப்பவர்கள் தெரிந்து கொண்டு கேள்வி போட்டால் நன்றாக இருக்கும்.